தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மக்காச்சோளத்தை உடனடியாக விற்கலாம்

உலகளவில் 2013-14ல் ஆண்டில் மக்காச்சோள வரத்து, சர்வதேச தானியக் குழுவின் மதிப்பீட்டின்படி 1115.3 மில்லியன் டன்களாகும். இது கடந்தாண்டு வரத்தான (2012-13) 991 மில்லியன் டன்களை விட அதிகமாகும். இதற்கான காரணம் நடப்பாண்டில் அமெரிக்கா, ஐரோப்பியா மற்றும் ரஷ்யா நாடுகளின் அதிக உற்பத்தி ஆகும். உலகளவில் மக்காச்சோளத்தின் தேவை நடப்பாண்டில் 939.7 மில்லியன் டன்களாகும். இது கடந்த ஆண்டு (2012-13) தேவையான 859 மில்லியன் டன்களை விட அதிகமாகும்.

இந்தியாவில், 2013-14ல் மக்காச்சோள பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 9.4 மில்லியன் எக்டர் மற்றும் 23.29 மில்லியன் டன்களாகும். இவை கடந்தாண்டு (2012-13) பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியான 8.7 மில்லியன் எக்டர் மற்றும் 22.26 மில்லியன் டன்களைக் காட்டிலும் கூடுதலாகும். இதற்கான காரணம், பயிரிடும் பரப்பு மற்றும் விளைச்சலுக்கான சூழல் சாதகமானதாக உள்ளதேயாகும். கடந்த பத்து ஆண்டுகளில் (2004-14) மக்காச்சோள பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தி வளர்ச்சி விகிதம் முறையே 2.5 சதவீதம் மற்றும் 5.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இந்தோனேசியா, வியட்னாம், சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மக்காச்சோள அளவு கடந்த ஆண்டு ஏற்றுமதியான 4.8 மில்லியன் டன்களிலிருந்து 3.5 மில்லியன் டன்களாக குறைந்துள்ளது. இதற்கு போட்டி நாடுகளின் ஏற்றுமதி அதிகரித்ததேயாகும். கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், பீகார் மற்றும் தமிழ்நாடு ஆகியவை முக்கிய பயிரிடும் மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் பெரம்பலூர், பழனி, ஒட்டன்சத்திரம், விருதுநகர், அருப்புக்கோட்டை மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளிலிருந்து வரத்து ஜனவரி மாதம் முதல் தொடங்கும்.

பீகாரிலிருந்து தற்போது தொடங்கியுள்ள வரத்து டிசம்பர் வரை இருக்கும் மற்றும் கர்நாடகாவிலிருந்து வரத்து ஜனவரி முதல் மே வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், மக்காச்சோளம் 25 சதவீதம் கால்நடை தீவனம், 49 சதவீதம் கோழி தீவனம் தயாரிப்பிலும் மற்றும் 12 சதவீதம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1200 முதல் ரூ.1250 வரை உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. வர்த்தகர்களின் கூற்றுபடி, பீகாரிலிருந்து வரும் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குவிண்டாலுக்கு ரூ.1200 வரை குறைந்துள்ளது. இது மேலும், குறைய வாய்ப்புள்ளது. தற்போது, தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு மக்காச்சோளத் தேவை 5000 டன்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 11 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது. 12 சதவீதத்திற்கு குறைந்த ஈரப்பதம் மற்றும் 2 சதவீதத்திற்கு குறைவான பூஞ்சாணம் ஆகியன நல்ல தரமான மக்காச்சோள தானியம் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகும்.

விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தரமான மக்காச்சோளத்தின் விலை (நவம்பர் – டிசம்பர், 2014ல்) குவிண்டாலுக்கு ரூ.1100 - 1150 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், ஜனவரி, 2015 வரை விலை உயர்வதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி – 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்